# 06.05.2026 செய்திகள்

## 2 இந்திய செய்தியாளர்களுக்கு புலிட்சர் பரிசு

- அமெரிக்க செய்தியாளர் ஜோசப் புலிட்சர் நினைவாக, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகம் சார்பில் ஆண்டுதோறும் புலிட்சர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.
- இதில் இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே. சுபர்ணா சர்மா ஆகியோர் உள்ளனர். டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக, "டிராப் டு" என்ற பெயரில் முன்னணி ஊடகத்தில் விழிப்புணர்வு கார்ட் டூன் தொடர் வெளியானது.
- இந்த படைப்புக்காக ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா மற்றும் ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சனுக்கு புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.
- மகாராஷ்டிர தலைநகர் மும்பையை சேர்ந்த ஆனந்த் ஆர்கே, இந்திய கடற்படை மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்காக புதுமையான கலை படைப்புகளை உருவாக்கி கொடுத்திருக்கிறார்.
- டெல்லியை சேர்ந்த செய்தியாளர் சுபர்ணா சர்மா, அல் ஜெசீ ரா, பிபிசி, இந்து குழுமத்தின் பிரன்ட்லைன் இதழ் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் செய்திகள். கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சன் பிரதமர் மோடியின் அரசியல் வளர்ச்சி குறித்து அவர் எழுதிய செய்திகள், கட்டுரைகள் உலக அளவில் பெரும் கவனத்தை ஈர்த்தன.

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 38-ஆக அதிகரிக்க ஒப்புதல்

- உச்சநீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகள் எண்ணிக்கையை தற்போதுள்ள 34-லிருந்து 38-ஆக அதிகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- 'உச்சநீதிமன்றத்தில் தற்போதைய தலைமை நீதிபதி மற்றும் 33 நீதிபதிகள் என்ற அளவில் நீதிபதிகளின் எண்ணிக்கை உள்ளது. இந்த எண் ணிக்கையை 38-ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## வங்கிகளில் கேட்பாரற்ற முதலீடுகளைத் தேட வலைதள வசதி: உச்சநீதிமன்றத்தில் ரிசர்வ் வங்கி தகவல்

- வங்கிகளில் பணம் வைப்பு செய்தவர்கள் இறந்துவிடும் நிலையில் அவரின் வாரிசுதாரர்கள் அந்த முதலீடுகள் குறித்த தகவல்களை அறிவதற்கான நடைமுறையை உருவாக்க வலியுறுத்தி பத்திரிகையாளர் சுசேதா தலால் என்பவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது இந்தத் தகவலை ரிசர்வ் வங்கி தெரிவித்தது.
- பல்வேறு வங்கிகளில் கோரப்படாமல் உள்ள முதலீடுகள் குறித்த விவரங்களை அறிய 'யுடிஜிஏஎம்' என்ற வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- அதன்படி, கூடுதலாக 4 நீதிபதி பணியிடங்களை அதிகரிக்கும் வகையில் வரவிருக்கும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் மசோதா கொண்டுவரப்படும்.
- இந்த மசோதா நிறைவேற்றப்படும் நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 38-ஆக உயரும்.
- உச்சநீதிமன்ற சட்டம் (நீதிபதிகள் எண்ணிக்கை) 1956-இல் இயற்றப்பட்டபோது, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தவிர்த்து பிற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 10 என்ற அளவில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டது.
- 1960-இல் திருத்தச் சட்டம் கொண்டுவந்து இந்த எண்ணிக்கை 13-ஆகவும், அடுத்த சட்டத் திருத்தம் மூலம் நீதிபதிகள் எண்ணிக்கை 17-ஆகவும் உயர்த்தப்பட்டது.
- பின்னர், 1986-இல் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தின் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 17-லிருந்து 25-ஆக உயர்த்தப்பட்டது.
- பின்னர், 2009-இல் இந்த எண்ணிக்கை 30-ஆகவும், 2019-இல் தலைமை நீதிபதி தவிர்த்து பிற நீதிபதிகளின் எண்ணிக்கை 33-ஆகவும் உயர்த்தப்பட்டது.

## வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம்: இந்தியா முதலிடம்

- கடந்த 2024-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து பிற நாடுகளுக்கு பணிக்குச் சென்ற நபர்கள் ரூ.12.8 லட்சம் கோடியை (137 பில்லியன் டாலர்கள்) தாய் நாட்டுக்கு அனுப்பியுள்ளதாக புலம்பெயர்ந்தோருக்கான ஐ.நா. அமைப்பு தெரிவித்தது.
- மேலும் ரூ.9.4லட்சம் கோடிக்கு மேல் (100 பில்லியன் டாலர்) வெளிநாட்டில் இருந்து பணம் பெற்ற ஒரே நாடாகவும் இந்தியா திகழ்கிறது எனவும் அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.
- இந்தியா, மெக்ஸிகோ, பிலிப்பின்ஸ் மற்றும் பிரான்ஸ் ஆகிய 4 நாடுகள் 2024-ஆம் ஆண்டில் வெளிநாட்டில் இருந்து அதிகளவில் பணம் பெறும் நாடுகளின் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடித்துள்ளன.

» தெற்காசிய பிராந்தியத்தில் அதிக வளர்ச்சி:

- இந்தியா, வங்கதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு வெளிநாடுகளில் இருந்து அதிகளவில் பணம் அனுப்பப்படுவதால் 2024-ஆம் ஆண்டில் தெற்காசிய பிராந்தியத்தில் இதன் வளர்ச்சி 11.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

» வெளிநாட்டில் 6.20 லட்சம் மாணவர்கள்:

- 2022-ஆம் ஆண்டில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சீனாவில் இருந்து சென்று வெளிநாடுகளுக்குச் கல்வி கற்றனர். இந்தப் பட்டியலில் 6.20 லட்சம் மாணவர்களுடன் இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது.

WHY SURESH...

✓ Comprehensive Coverage
✓ Expert Faculty & Mentorship
✓ Rigorous Testing & Analysis
✓ Structured Study Materials
✓ 24/7 Doubt - Clearing Support
✓ Offline Class / Online Class





| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI |
|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 |